**ஜனவரி – 29**


# TNPSC துளிகள்

- 10வது தேசிய வாக்காளர் தினக் கொண்டாட்டத்தின் போது வழங்கப்பட்ட தேர்தல் குழுவின் தேசிய விருதுகளின் ஒரு பகுதியாக 2019 ஆம் ஆண்டில் வாக்காளர் விழிப்புணர்வு மற்றும் கல்விப் பிரச்சாரத்திற்காக இந்தியத் தேர்தல் ஆணையத்தின் விருதை இந்து தமிழ் நாளிதழ் வென்றுள்ளது.
    - தேசிய வாக்காளர் தினமானது 2020 ஜனவரி 25 அன்று கொண்டாடப்பட்டது.
- கூடைப்பந்து விளையாட்டு வீரரான கோபி பிரையன்ட் (41 வயது) மற்றும் அவரது மகளான கியானா பிரையன்ட் (13 வயது) ஆகியோர் கலிபோர்னியாவின் கலாபாசஸில் நிகழ்ந்த ஹெலிகாப்டர் விபத்தில் கொல்லப்பட்டனர்.
    - ஐந்து முறை தேசியக் கூடைப்பந்துக் கழக சாம்பியன் பட்டம் பெற்ற இவர் 2016 ஆம் ஆண்டில் ஓய்வு பெற்றார்.
- கேரளா, பஞ்சாப் மற்றும் ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களுக்குப் பிறகு குடியுரிமை (திருத்த) சட்டத்திற்கு எதிரான ஒரு தீர்மானத்தை நிறைவேற்றிய நான்காவது மாநிலமாக மேற்கு வங்க மாநிலம் உருவெடுத்துள்ளது.
- அண்மையில் ஒடிசாவின் கேந்திரப்பாராவின் கரடாபூர் தொகுதியில் உள்ள பல கிராமங்களில் சுமார் 40 எருமைகள் சஹானா நோய் (ரத்தக்கசிவு செப்டிசீமியா) காரணமாக இறந்துள்ளன.

# தேசியச் செய்திகள்

## சட்லஜ் யமுனா இணைப்புக் (SYL) கால்வாய்

- சட்லஜ் - யமுனா இணைப்புக் கால்வாய் (SYL கால்வாய்) என்பது பஞ்சாபில் உள்ள சட்லஜ் நதியை ஹரியானாவில் உள்ள யமுனைக் கால்வாயுடன் இணைப்பதற்காக முன்மொழியப்பட்ட 214 கி.மீ நீளம் கொண்ட ஒரு நீர் வழிப் பாதையாகும்.
- பஞ்சாப் மற்றும் ஹரியானா ஆகிய மாநிலங்களுக்கிடையேயான SYL பிரச்சினையை சுமூகமாகத் தீர்த்து வைக்குமாறு மத்திய அரசிற்கு இந்திய உச்ச நீதிமன்றமானது அண்மையில் உத்தரவிட்டது.
- இந்த உத்தரவின் காரணமாக இந்த இரு மாநிலங்களுக்கிடையேயான நீர்ப் பகிர்வு தொடர்பான சர்ச்சைக்குரிய பிரச்சினையானது மத்திய அரசால் முக்கியமான நிலைக்குக் (சுமூகமான தீர்வு) கொண்டு வரப்பட்டுள்ளது.
- 1966 ஆம் ஆண்டில் பழைய (பிரிக்கப்படாத) பஞ்சாபிலிருந்து ஹரியானா உருவாக்கப்பட்டது. அதன் பிறகு ஹரியானாவுக்கு நதி நீரில் அதன் பங்கைக் கொடுக்கும் பிரச்சனை ஆரம்பமானது.
- ராவி மற்றும் பியாஸ் நதி நீரை ஹரியானாவுடன் பகிர்ந்து கொள்வதை பஞ்சாப் மாநிலம் எதிர்த்துள்ளது. ஹரியானா மாநிலத்திற்கு தண்ணீர் கொடுக்கும் அளவிற்கு தன்னிடம் தண்ணீர் இல்லை என்று பஞ்சாப் மாநிலம் வாதிட்டு வருகின்றது.





## நாகர்த்தன் அகழ்வாராய்ச்சி

- சமீபத்தில், மகாராஷ்டிராவின் நாக்பூரில் உள்ள நாகர்த்தன் கிராமத்தில் தொல்பொருள் அகழ்வாராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது.
- இந்த அகழ்வாராய்ச்சியானது வாகாடக வம்சத்தின் வாழ்க்கை, மதம் மற்றும் வர்த்தக நடைமுறைகள் ஆகியவை குறித்த ஆதாரங்களை வழங்கியுள்ளது.
- நாகர்த்தன் கிராமமானது வாகாடக இராஜ்ஜியத்தின் தலைநகராக விளங்கியது.
- வாகாடக வம்சமானது கி.பி 3 ஆம் நூற்றாண்டின் மத்தியில் மத்திய தக்காணப் பகுதியில் தோன்றியது.
- இதன் பேரரசானது பின்வரும் பகுதிகள் வரை பரவியுள்ளதாக நம்பப் படுகின்றது.
  - வடக்கில் மால்வா மற்றும் குஜராத்தில் இருந்து தெற்கில் துங்கபத்ரா நதி வரை,
  - மேற்கில் அரபிக் கடலில் இருந்து கிழக்கில் வங்காள விரிகுடா வரை.

***கண்டுபிடிப்புகள்***

- நாகார்த்தன் கிராமத்தில் இருந்து களிமண் முத்திரைகள் தோண்டப்படுவது இதுவே முதல் முறையாகும்.
- ராணி பிரபாவதிகுப்தா என்பவரால் வழங்கப்பட்ட செப்புத் தகடானது குப்தர்களின் வம்சாவளியிலிருந்து தொடங்குகின்றது. இந்த செப்புத் தகடானது ராணியின் தாத்தாவான சமுத்திரகுப்தா மற்றும் அவரது தந்தை இரண்டாம் சந்திரகுப்தர் ஆகியோரைக் குறிப்பிடுகின்றது.
- வாகாடர்கள் மத்தியத் தரைக்கடல் வழியாக ஈரானுடனும் அதற்கு அப்பாலும் கடல் வணிகத்தில் ஈடுபட்டு வந்துள்ளனர். இந்த முத்திரைகள் அந்தப் பேரரசின் தலைநகரிலிருந்து வழங்கப்பட்ட அலுவல்பூர்வ அரச அனுமதியாகப் பயன்படுத்தப்பட்டன என்று நம்பப்படுகின்றன.







## போடோ ஒப்பந்தம்

- போடோலாந்தின் தேசிய ஜனநாயக முன்னணியின் (National Democratic Front of Bodoland - NDFB) ஒன்பது பிரிவுகளுடன் வரலாற்றுச் சிறப்புமிக்க ஒப்பந்தம் ஒன்றில் இந்திய அரசு கையெழுத்திட்டுள்ளது.
- இந்த ஒப்பந்தத்தின் படி, போடோலாந்து பிராந்தியப் பகுதி மாவட்டமானது உள்ளூர் மக்களுக்கு சிறப்பு உரிமைகளைக் கொண்டிருக்கின்றது.
- இருப்பினும், வெளிநபர்கள் இந்தப் பகுதியில் பணியாற்றுவதற்கு "அனுமதி" பெற வேண்டும்.
- இந்த ஒப்பந்தமானது மத்திய உள்துறை அமைச்சரான அமித் ஷா, அசாம் மாநில முதல்வரான சர்பானந்தா சோனோவால் மற்றும் NDFBயின் தலைவர்கள் ஆகியோர் முன்னிலையில் கையெழுத்தானது.
- இந்த ஒப்பந்தமானது இந்திய அரசியலமைப்பின் ஆறாவது அட்டவணையின் கீழ் போடோலாந்து பிராந்திய ஆணையத்தை (BTC - Bodoland Territorial Council) உருவாக்க வழிவகை செய்துள்ளது.

*போடோ பற்றி*

- போடோ என்பது அசாமில் உள்ள ஒரு மிகப்பெரிய பழங்குடியின சமூகமாகும். இது அம்மாநில மக்கள் தொகையில் 5 - 6 சதவீதத்திற்கும் அதிகமான மக்கள் தொகையைக் கொண்டுள்ளது.

- BTC ஆனது தற்பொழுது அசாமில் சிராங், கோக்ராஹர், பாஸ்கா மற்றும் உடல்குரி ஆகிய 4 மாவட்டங்களை நிர்வகிக்கின்றது.
- இந்தப் பகுதிகள் போடோலாந்து பிராந்தியப் பகுதி மாவட்டங்கள் என்று அழைக்கப்படுகின்றன.




## உலகளாவிய உருளைக் கிழங்கு மாநாடு

- உலகளாவிய உருளைக் கிழங்கு மாநாடானது 2020 ஆம் ஆண்டு ஜனவரி 28 ஆம் தேதி முதல் முதல் ஜனவரி 31 ஆம் தேதி வரை குஜராத்தில் உள்ள காந்தி நகரில் நடைபெற்று வருகின்றது.
- இந்த மாநாடானது பின்வருவனவற்றுடன் இணைந்து இந்திய உருளைக் கிழங்கு சங்கத்தினால் (Indian Potato Association - IPA) ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
  - இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் (ICAR - Indian Council of Agricultural Research), புது தில்லி,
  - ICAR - மத்திய உருளைக் கிழங்கு ஆராய்ச்சி நிறுவனம், சிம்லா மற்றும்
  - சர்வதேச உருளைக் கிழங்கு மையம், லிமா, பெரு.
- ஹெக்டேருக்கு 30 டன் உற்பத்தித் திறனுடன் இந்தியாவில் உள்ள குஜராத் மாநிலமானது கடந்த பத்தாண்டுகளாக முதல் இடத்தில் இருந்து வருகின்றது.
- அரிசி மற்றும் கோதுமை ஆகியவற்றிற்குப் பிறகு, உருளைக் கிழங்கானது உலகின் மூன்றாவது மிக முக்கியமான உணவுப் பயிராக விளங்குகின்றது.



# சுற்றுச்சூழல் செய்திகள்

## உயிரிப் பாறை அல்லது தாதுப் படிமத் தொழில்நுட்பம்

- கச் வளைகுடாவில் பவள மறுசீரமைப்பை இந்தியா தொடங்குகின்றது.
- குஜராத்தின் வனத் துறையின் உதவியுடன் இந்திய விலங்கியல் ஆய்வு மையமானது (Zoological Survey of India - ZSI) உயிரிப் பாறை அல்லது தாதுப் படிமத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பவளப் பாறைகளை மீட்டெடுப்பதற்கான ஒரு செயல்முறையை முயற்சித்து வருகின்றது.
- இந்தத் தொழில்நுட்பமானது தண்ணீரில் உள்ள மின்முனைகள் மூலம் ஒரு சிறிய அளவு மின்சாரத்தை செலுத்துவதன் மூலம் செயல்படுகின்றது.
- இந்தியாவில் நான்கு பெரிய பவளப் பாறைப் பகுதிகள் உள்ளன:
  - அந்தமான் நிக்கோபர் தீவுகள்,
  - லட்சத் தீவு,
  - மன்னார் வளைகுடா மற்றும்
  - கட்ச் வளைகுடா.




# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## குடியரசு தினம் 2020

- இந்தியா தனது 71வது குடியரசு தினத்தை 2020 ஆம் ஆண்டு ஜனவரி 26 ஆம் தேதி அன்று கொண்டாடியது.
- இந்தியாவின் 71வது குடியரசு தின அணிவகுப்பில் பிரேசில் அதிபரான ஜெய்ர் போல்சனரோ தலைமை விருந்தினராகக் கலந்து கொண்டார்.
  - இந்தியாவின் குடியரசு தின அணிவகுப்பிற்குத் தலைமை விருந்தினராக அழைக்கப்பட்ட மூன்றாவது பிரேசில் அதிபர் போல்சனரோ ஆவார்.
- இந்த ஆண்டு, முதன்முறையாக, இந்திய நுழைவு வாயிலுக்கு அருகில் உள்ள அமர் ஜவான் ஜோதிக்குப் பதிலாகப் புதிதாகக் கட்டப்பட்ட தேசியப் போர் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தும் விழா நடைபெற்றது.
- இந்த விழாவில் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள தலைமைப் பாதுகாப்புப் படைத் தளபதி ஜெனரல் பிபின் ராவத் மற்றும் முப்படையைச் சேர்ந்த தலைமைத் தளபதிகள் ஆகியோருடன் பிரதமர் மோடி கலந்து கொண்டார்.

- அணிவகுப்பில் கலந்து கொண்ட துணை இராணுவப் படையினரிடையே மத்திய தொழில்துறைப் பாதுகாப்புப் படையானது முதல் பரிசைப் பெற்றுள்ளது. முப்படைகளின் அணிவகுப்பில் இந்திய விமானப் படையின் (Indian Air Force - IAF) அணிவகுப்பு குழு முதல் பரிசைப் பெற்றுள்ளது.
- இந்த விழாவின் போது நான்காவது தலைமுறை இராணுவ அதிகாரியான கேப்டன் தன்யா ஷெர்கில் என்பவர் இந்திய இராணுவத் தகவல் தொடர்புப் படைப் பிரிவின் அனைத்து ஆண்கள் படையை வழிநடத்தினார்.
    - இந்தப் படைப் பிரிவின் குறிக்கோள் "டீவ்ரா சௌகாஸ்" என்பதாகும்.
- 71வது குடியரசு தின அணிவகுப்பின் ஒரு பகுதியாக மத்திய ரிசர்வ் காவல் படையின் (Central Reserve Police Force - CRPF) அனைத்து பெண்கள் இரு சக்கர வாகனக் குழுவானது தனது முதலாவது அணிவகுப்பை மேற்கொண்டது.
- 71வது குடியரசு தின அணிவகுப்பின் முக்கிய சிறப்பம்சம் தனுஷ் பீரங்கித் துப்பாக்கியை முதன்முறையாக காட்சிப்படுத்தியதாகும்.
    - "இந்தியாவில் தயாரிப்போம்" என்ற முதன்மைத் திட்டத்தின் கீழ் தனுஷ் பீரங்கித் துப்பாக்கிகள் தளவாடத் தொழிற்சாலை வாரியத்தால் தயாரிக்கப்படுகின்றன.

***குடியரசு தினத்தில் பங்கேற்றவர்களின் பட்டியல் / அட்டவணை***

- 2020 ஆம் ஆண்டின் குடியரசு தின அணிவகுப்பில் மொத்தம் 22 காட்சிப்பட அணிவகுப்பு நடத்தப்பட்டது. இதில் பல்வேறு மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களைச் சேர்ந்த 16 காட்சிப் படங்களும் அமைச்சகங்கள், துறைகள் மற்றும் தேசிய பேரிடர் மீட்புப் படை ஆகியவற்றைச் சேர்ந்த 6 காட்சிப் படங்களும் அடங்கும்.

| மாநிலம் | காட்சிப் படம் |
|---|---|
| **குஜராத்** | ராணி கி வாவ் – ஜல் மந்திர் |
| **மேகாலயா** | வேர்ப் பாலம் |
| **பஞ்சாப்** | குரு நானக் தேவின் 550வது பிறந்த நாள் |
| **தமிழ்நாடு** | கிராமப்புற மற்றும் பண்டையக் கலாச்சாரப் பாரம்பரியம்- அய்யனாரின் சிலை |
| **ராஜஸ்தான்** | ஜாலி ஜரோஹா |
| **ஜம்மு காஷ்மீர்** | கிராமத்தை நோக்கி - காஷ்மீர் பண்டிதர்களை மறுவாழ்வு செய்தல் |
| **தேசியப் பேரிடர் மீட்புப் படை** | பேரிடர் நிவாரணத் தொழில்நுட்பம் |
| **மத்திய நிதி அமைச்சகம்** | நிதியியல் உள்ளடக்கல் |

# இதரச் செய்திகள்

## உலகளாவியத் திறன் போட்டிக் குறியீடு 2020

- உலக பொருளாதார மன்றத்தின் (WEF - World Economic Forum) வருடாந்திர கூட்டத்தில் 2020 ஆம் ஆண்டிற்கான உலகளாவியத் திறன் போட்டிக் குறியீடானது (Global Talent Competitive Index - GTCI) வெளியிடப் பட்டுள்ளது.
- INSEAD வணிகப் பள்ளியானது கூகுள் மற்றும் அடெக்கோ குழுமத்தின் உதவியுடன் GTCI அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இந்தக் குறியீட்டில் இந்த ஆண்டு இந்தியா எட்டு இடங்கள் முன்னேறி, 72வது இடத்தைப் பிடித்துள்ளது.


❖ இந்தக் குறியீட்டில் சுவிட்சர்லாந்து முதலிடத்தையும் அமெரிக்கா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகள் முறையே இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களையும் பிடித்துள்ளன.

***GTCI பற்றி***

❖ GTCI ஆனது 2013 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.

❖ GTCI என்பது திறமைகளுக்காகப் போட்டியிடும் நாடுகளின் திறனை அளவிடும் ஒரு வருடாந்திரத் தரப்படுத்தல் அறிக்கையாகும்.

❖ GTCI ஆனது ஈர்த்தல், தக்க வைத்தல், இயக்குதல், வளர்தல், தொழில் திறன் மற்றும் உலகளாவிய அறிவு திறன் ஆகிய ஆறு குறிகாட்டிகளின் அடிப்படையில் நாடுகளைத் தரவரிசைப் படுத்தியுள்ளது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★